# பொதுக்காலம் 17ஆம் வாரம் - ஞாயிறு

## இரண்டாம் ஆண்டு

### திருப்பலி முன்னுரை

இறைஇயேசுவில் அன்பிற்குரியவர்களே, இன்று பொதுக்காலம் 17ம் ஞாயிறு வழிபாட்டை சிறப்பிக்க வந்துள்ள உங்கள் அனைவருக்கும் இயேசுவின் இனிய நாமத்தில் அன்பான வணக்கங்கள்.

எந்த ஒரு நிகழ்விலும் இறைவனின் அருட்கரமும், ஆசீரும், மனிதனுடைய பங்களிப்பும், முயற்சியும் இருந்தால் மட்டுமே அற்புதம் நிகழும், வெற்றி கிடைக்கும்" என்பதையே இன்றைய நற்செய்தி நமக்கு உணர்த்துகிறது. பாலைநிலத்தில் இயேசுவின் போதனையை கேட்க வந்த கூட்டத்தினருக்கு நெடுநேரமாகிவிட்டதால் சீடர்கள் அவர்களை உண்பதற்காக அனுப்பிவிடும்படி, இயேசுவிடம் கூறிய போது, அவர் சீடர்களிடம் "நீங்களே அவர்களுக்கு உணவு வழங்குங்கள்" என்று கூறுகிறார். அன்று, பாலைநிலத்தில் மன்னாவும், காடையும் கொடுத்த இறைவனுக்கு, இன்று மக்களுக்கு உணவு கொடுக்க, அற்புதம் செய்ய இயலாத நிலை இல்லை. மாறாக, தம் சீடர்;களுக்கு அவர்களின் பொறுப்புணர்வினையும், அவர்களது பங்களிப்பையும் அதில் கற்றுக் கொடுக்க விரும்புகிறார். இறைமகனின் ஆசீரும், அவர்களின் பங்களிப்பாக, அவர்களிடையே இருந்த இரு அப்பங்களும் பலுகிப் பெருகியதை காண்கிறோம். இறைநம்பிக்கையுடன், நமது முயற்சியும் இணையும்போது எந்த ஒரு செயலும் நலமாக அமைந்திடும். நோயாளிகள் மருத்துவரை அணுகாது, இறைவன் என்னை குணப்படுத்துவார் என எந்த ஒரு மருத்துவ சிகிச்சையும் எடுக்காமல் இருப்பது தவறாகும். ஏனென்றால், "மருத்துவரையும் இறைவனே படைத்தார்" என சீராக் ஆகமம் நமக்குத் தெளிவாக கூறுகிறது. இறைநம்பிக்கையோடும் நமது முயற்சியும் இருக்க வேண்டுமென்பதையே இறைவனும் விரும்புகிறார். கடுமையாக உழைக்காமல், பணக்காரராக வேண்டும்: படிக்காமல் தேர்வில் வெற்றி பெற வேண்டும்: பயிற்சி எடுக்காமல் போட்டியில் முதலிடம் பெற வேண்டும் என்று எண்ணி, நன்கு செபித்தால் மட்டும் இறைவனின் பங்களிப்பு அதில் இருக்காது.

ஆம், "ஆண்டவரே, ஆண்டவரே" எனச் சொல்கிறவர்கள் எல்லாம் விண்ணரசில் செல்ல முடியாது. அதற்கான நம் முயற்சி, செயல்களாக, இறைவன் காட்டிய வழியில் பசித்தோர்க்கு உணவளித்து, தாகத்திலிருப்போருக்கு தண்ணீர் கொடுத்து, சிறையில் இருப்பவர்களை சந்தித்தோம் என்றால், நாமும் விண்ணகம் செல்ல முடியும். பணக்கார இளைஞன், கட்டளைகளை எல்லாம் கடைபிடித்தான், நிலைவாழ்வு பெற விரும்பினான், ஆனால், இறைமகன் அதற்கான அவன் முயற்சியாக, பங்களிப்பை அவனுக்கு உணர்ததுகிறார். இருப்பதையெல்லாம் ஏழைகளுக்கு கொடுக்க சொல்லும்

போது, அதைச் செய்ய மனமில்லாதவனாக சென்றான் என்பதை விவிலியத்தில் காண்கின்றோம். நாம் வெற்றி பெறும்போது "என்னால் மட்டுமே, என்; முயற்சியால் மட்டுமே இந்த வெற்றி கிடைத்தது" என்ற மமதையில், ஆணவத்தில் நாம் நம்மை உயர்த்த முற்படும்போது இறைவனின் தண்டனை நிச்சயம் கிடைக்கும். நெபுகத்னேசர் என்ற மன்னன், "என் வலிமையால், என் மாட்சியின் மகுடமாக வளர்ந்ததே, இந்த பாபிலோன் நகர்" என்ற ஆணவத்துடன், செருக்குடன் எண்ணியபோதே இறைவனின் தண்டனை உடனே அவனுக்கு கிடைத்தது. அரியணையிலிருந்து தள்ளப்பட்டார், மனித சமுதாயத்தினின்று விரட்டப்பட்டார்" என தானியேல்; நூல் நமக்கு உணர்த்துகிறது. ஆம், அன்பிற்குரிய இறைமக்களே, நாம் "தான்" என்ற ஆணவத்துடன் செயல்படாது, இறைவனின் அருட்துணையுடன் நமது முயற்சியும், உழைப்பும், பங்களிப்பும் கொடுக்க முற்படும்போது நிச்சயம் எந்த ஒரு செயலும், நிகழ்வும் வெற்றியை, ஆசீரைத் தரும் என்பதை உணர்ந்தவர்களாக, இத்தெய்வீக திருப்பலியில் அவர் பாதம் சரணடைவோம்.

## முதல் வாசக முன்னுரை: 2 அரசர்கள் 4:42-44

வாழ்வுக்குரியவர்களே,

இன்றைய முதல் வாசகம், இயேசு அப்பங்களைப் பலுகச் செய்ததன் முன் அடையாளமாக இறைவாக்கினர் எலிசா செய்த அற்புதத்தை எடுத்துரைக்கிறது. பணியாளர் கொண்டு வந்த இருபது வாற்கோதுமை அப்பங்களைப் பலுகச் செய்து எலிசா நூறு பேரின் பசியாற்றிய நிகழ்வையும், ஆண்டவரின் சொல்லுக்கு ஏற்ப அவற்றில் மீதியும் இருந்ததாக இங்கு காண்கிறோம். நாமும் ஆண்டவரில் நம்பிக்கை கொண்டவர்களாக வாழ்ந்து, மிகுதியான வரங்களைப் பெற வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை: எபேசியர் 4:1-6

வாழ்வுக்குரியவர்களே,

இன்றைய இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், ஆண்டவரில் முழுமையாக நம்பிக்கை கொள்ள அழைப்பு விடுக்கிறார். அன்பு, அமைதி, பொறுமை, கனிவு, தாழ்மை ஆகியவற்றைக் கடைபிடித்து, அனைவரும் ஒருமைப்பாட்டுடன் வாழ வேண்டும் என்பதையும் அவர் எடுத்துரைக்கிறார். திருமுழுக்கின் வழியாக கடவுளின் பிள்ளைகளாக மாறியுள்ள நாம், அவரை முழுமையாக சார்ந்து வாழும் வரம் வேண்டி, இந்த வாசகத்துக்கு செவிமடுப்போம்.

மன்றாட்டுக்கள்:

*பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.*

“என் எண்ணங்கள் உங்கள் எண்ணங்கள் அல்ல: உங்கள் வழிமுறைகள் அல்ல” என்ற இறைவா,

“உமது வார்த்தையின்படியே எனக்கு ஆகட்டும், என்று இறைதிட்டத்தை ஏற்ற அன்னைமரி போல, என் விருப்பம் அன்று, உமது திருவுளமே நிறைவேறட்டும்” என்று இறைதிருவுளத்திற்கு தன்னை கையளித்த இறைமகனைப் போல, நாங்களும் எங்கள் வாழ்வில் எங்கள் விருப்பத்தை முன்னிருத்ததாமல், அனைத்தையும் இழந்த பின்பும், உம்மைப் பழிக்காது, உம் திருவுளத்தை ஏற்று வாழ்ந்த யோபுவைப் போல, எங்கள் வாழ்வில் வரும் இன்ப, துன்பங்கள், வெற்றி, தோல்விகள் அனைத்திலும நாங்களும் உமது திருவுளத்தை ஏற்று வாழக்கூடிய ஆழ்ந்த இறைவிசுவாசத்தை தந்தருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“விழிப்பாயிருந்து உன் இதயத்தைக் காவல் செய், ஏனெனில் அதனின்று பிறப்பவை உன் வாழ்க்கையின் போக்கை உறுதி செய்யும்” என்ற இறைவா,

படிக்கின்ற மாணவ, மாணவியரை உம்மிடம் ஒப்புக் கொடுக்கின்றோம். அவர்களுக்கு நீர் சாலமோனுக்கு தந்த அந்த ஞானத்தையும், அறிவையும் கொடுத்தருளும். படிக்கின்ற பருவத்தில், தங்கள் கடமை, பொறுப்பை உணாந்து படிக்கவும், எந்த தவறான மாயக் கவர்ச்சியிலும் அவர்கள் வீழ்ந்திடாமல், தடம் புரண்டிடாமல், இருளின் ஆட்சிக்குரிய செயல்களில்; தங்கள் வாழ்வை தொலைத்துவிடாமல், தங்கள் பெற்றோருக்கு எந்த இழுக்கையும் ஏற்படுத்தாது, நல்ல ஒழுக்க நெறியில், பண்பாட்டில், பழக்கவழக்கங்களில், மனிதநேய பண்புகளில் சிறந்தோங்கிடவும், விவேகத்துடன் எல்லாவகை தீய நடத்தையிலிருந்தும், தங்கள் இதயத்தை விழிப்பாயிருந்து, காத்துக் கொள்ளவும், ஒளியின் பாதையில் நடந்திட, நீர்தாமே அவர்களை கண்ணின்மணிபோல பாதுகாத்து வழிநடத்திட வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“பிள்ளைகள், ஆண்டவர் அருளும் செல்வம்; மக்கட்பேறு அவர் அளிக்கும் பரிசில்” என்ற இறைவா,

அன்று, வயது முதிர்ந்த நிலையில் ஆபிரகாம் - சாராவிற்கும், உம்மை உறுதியாகப் பற்றிக்கொண்டு கண்ணீரோடு வேண்டிய அன்னாவிற்கும், செக்கரியா -

எலிசபெத்திற்கும் குழந்தைப்பேற்றினை அளித்தீரே, இதோ உமது முன்னிலையில் திருமணமாகி பல ஆண்டுகள் கடந்த நிலையில் குழந்தைச் செல்வம் வேண்டி, பலரின் ஏளனப் பேச்சுக்களையும், பழிச்சொற்களையும், மனதிலே சுமந்து, கண்ணீரோடு உம் திருமுன் நிற்கும் தம்பதியரை இரக்கத்துடன் கண்ணோக்கியருளும். அவர்களுக்கு மக்கட்செல்வத்தைத் தந்து, கணவன் - மனைவி என்னும் நிலையைக் கடந்து, தாய், தந்தை என்னும் உயர்ந்த பேற்றினைத் தந்தருருள வேண்டுமென்று, இறைவா, உம்i;ம மன்றாடுகின்றோம்.

“உள்ளதைக் கொண்டு உன்னையே பேணிக் கொள்” என்ற இறைவா,

எங்கள் வாழ்வில், உலக வாழ்விற்கான சொத்துக்களையும் செல்வங்களையும் சேர்த்து வைக்க வேண்டும் என்று பேராசைப்படாமல், ”பண ஆசையே எல்லாத் தீமைகளுக்கும் வேர்” என்பதையும், நமக்கும் கீழே உள்ளவர்கள் கோடி, நினைத்துப் பார்த்து நிம்மதி நாடு” என்பதையும் உணர்ந்து, இருப்பதிலே நிறைவு கொள்ளவும், மண்ணுலகில் செல்வத்தை பூச்சியும், துருவும் அழித்துவிடும் என்பதை உணர்ந்து, விண்ணகத்தில் செல்வம் சேர்த்து வைக்கக்கூடியவர்களாக, போதுமென்ற மனமுடையவர்களாக வாழ்ந்திட, வரமருள வேண்டுமென்று, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.

“சொல்லாலும் செயலாலும் உங்கள் பெற்றோரை மதியுங்கள்” என்ற இறைவா,

இறைமகன் இயேசு, அன்னைமரிக்கும், யோசேப்புக்கும் கீழ்படிந்து, பணிந்து வாழ்ந்ததைப் போல, வளர்கின்ற குழந்தைகளும், தங்களுக்காக பல தியாகங்கள் செய்து இம்மண்ணிலே நடமாடும், கண்கண்ட தெய்வங்களான, தங்கள் பெற்றோரை மதித்து, முழுமையாக நேசித்து, அவர்களின் வழிநடத்துதலைப் பின்பற்றி வாழந்திடவும், அவர்களை முதிர்ந்த வயதில் அவமதித்து, புறந்தள்ளி, ஒதுக்கி முதியோர் இல்லத்தில் சேர்த்து விடும் கொடூரமான மனநிலையகற்றி, பெற்றோர்க்கு பெருமை சேர்த்திடக் கூடியவர்களாக வாழவும் வரம் வேண்டி, இறைவா, உம்மை மன்றாடுகின்றோம்.